[11th November 1965

technical education. The process of reorientation has been set in motion and the States Annual Plan for 1966–67, the first year of the Fourth Plan, which will be placed before the House in due course will reflect such reorientation.

திரு. வை. சங்கரன் : யுத்த தளவாடத் தொழிற்சாலைகள் பல ஆரம்பிக்க மத்திய சர்க்காரோடு கலந்து மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லா விஷயங்களைப் பற்றியும் அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. அவசியம் ஏற்பட்டால் மத்திய சர்க்காரோடு கலந்தும் ஆலோசிக்கும்.

திருச்சியில் விமானப் பயிற்சிச் சங்கம்

* 472 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கடன் கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் (Flying Club) ஆரம்பமாக இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : Necessary preliminary steps are being taken for the establishment of a Flying Club at Tiruchirappalli.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மிகக் குறுகிய காலத்தில் இதை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஃப்ளையிங் க்ளப் அமைப்பது சர்க்கார் முன்வந்து செய்வதில்லை. நகர முக்கியஸ்தர்கள் இப்படிப்பட்ட க்ளப் ஏற்படுத்த அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பொழுது இருக்கக் கூடிய அவசியத்தைக் கருதி தனியார் முன்வந்து ஆரம்பிக்க வேண்டும் என்றால், மாவட்டக் கலெக்டர்கள் வேண்டிய உதவியளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அம்மாதிரி விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

கம்பி இல்லாத் தந்தி கேந்திரங்கள்

* 473 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :**
திரு. வை. சங்கரன் : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கம்பி இல்லாத் தந்தி கேந்திர நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?